# சிந்துவெளி நாகரிகம்- ஹரப்பா (Indus Valley Civilization) - Test Yourself

*Answers given at the end of the page. or click on check answer link*

1. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:
1.எடைக்கற்கள் இரும்பினால் தயாரிக்கப்பட்டிருந்தன.
2.செவ்வக வடிவிலான முத்திரைகளில் சித்திர வடிவிலான எழுத்துகள் எழுதப்பட்டுள்ளன.
3. களிமண் முத்திரைகளில் காளைகள், 6வண்டி. புறா, படகுகள் யோகமுத்திரையில் அமர்ந்துள்ள ஒருவரின் பெடிவம். சுடுமண் உருவப் பொம்4யகள் முதலியன காணப்படுகின்றன.

a. 1, 3 மட்டும் சரி
b. 1, 2 மட்டும் சரி
c. 2 மட்டும் 3 சரி
d. 2 மற்றும் 3 தவறு

Check Answer

2. கீழ்கண்ட வாக்கியங்களை கவனி: கூற்று: 1 : சிந்து சமவெளி நகரங்கள் திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தன. கூற்று : 2 பொதுவாக நகரின் வடப்பகுதி குறுகலாகவும் உயரமாகவும் இருந்தது.

a. 1 மற்றும் 2 இரண்டும் சரி, மேலும் 2 என்பது 1விற்கு சரியான விளக்கம்.
b. 1 மற்றும் 2 இரண்டும் சரி, மேலும் 2 என்பது 1விற்கு சரியான விளக்கமல்ல.
c. 1 சரி அனால் 2 தவறு
d. 1 தவறு அனால் 2 சரி

Check Answer

3. கீழ்க்கண்ட வாக்கியங்களில் எழுத்து முறை தொடர்பானவற்றுள் எவை சரியனாவை?
1. சுட்ட களிமண் பலகைகளின் மீது சித்திர எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.
2. ஒவ்வொரு சித்திரமும், ஒரு குறிப்பிட்ட கருத்தைப் புலப்படுத்துகின்றது.
3. ஏடுகளில் வரிகள் வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமாகவும், இடப்பக்கதிலிருந்து வலப்பக்கமாகவும் எழுதப்பட்டுள்ளன.
4. இவ்வெழுத்துக்கள் தொல் - தமிழ் எழுத்துடன் உறவுடையன என்று கூறப்படுகிறது,

a. 1, 2 மற்றும் 3
b. 2, 3 மற்றும் 4
c. 2 மற்றும் 4
d. 1, 2, 3 மற்றும் 4

Check Answer

4. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:
1. தங்கம், வெள்ளி, தந்தம், விலையுயர்ந்த கற்கள் போன்றவற்றை அணிகலன்கள் செய்யப் பயன்படுத்தினர்.
2. ஏழை மக்கள் கிளஞ்சல், தாமிரம் போன்றவற்றால் செய்யப்பட்ட அணிகலன்கள் அணிந்தனர்.
3. பெண்கள் மட்டும் அணிகலன்களை அணிந்தனர்.

a. 1 மட்டும் சரி
b. 1,2 சரி 3 தவறு
c. 2 மட்டும் 3 சரி
d. 2 மற்றும்3 தவறு

Check Answer

5. சிந்து மாகாணம் லர்காணா மாவட்டத்தில் மொகஞ்சதாரோ நகரம் தோண்டி எப்போது எடுக்கப்பட்டது.

a. 1920
b. 1921
c. 1922
d. 1923

Check Answer

6. வெண்கலத்தால் ஆன நாட்டிய மங்கையின் உருவச்சிலை எங்கு கண்டெடுக்கப்பட்டது.

a. சிட்டாடல்
b. புதையுண்ட நகரம்
c. கலிபங்கன்
d. மொகஞ்சதாரோ

Check Answer

7. ஹரப்பா தற்போது எங்கு உள்ளது?

a. பஞ்சாப்
b. பாகிஸ்தான்
c. காலிபங்கன்
d. குஜராத்

Check Answer

8. அணிகலன்கள் செய்ய பயன்படுத்திய உலோகம் எது?

a. தங்கம்,வெள்ளி
b. செம்பு, வெண்கலம்
c. தங்கம், செம்பு
d. வெள்ளி , வெண்கலம்

Check Answer

9. கீழ்கண்ட வாக்கியங்களை கவனி:
1. சிந்து சமவெளி மக்களிடம் தொழில்நுட்பங்கள் நடைமுறையில் இருந்தன.
2. கால்வாய் சந்திப்புகள் திறந்து பழுதுபார்க்கும் முடிகளும் அமைந்து இருந்தன.

a. 1 மட்டும் சரி
b. 2 மட்டும் சரி
c. 1 மற்றும் 2 சரி
d. இரண்டும் தவறு

Check Answer

10. இந்திய நாகரிகத்தின் தொடக்கமாக விளங்குவது எது?

a. சிந்துசமவெளி நாகரிகம்
b. கங்கைச் சமவெளி நாகரிகம்
c. சங்கால நாகரிகம்
d. இவற்றுள் எதுவுமில்லை

Check Answer

11. ஹரப்பா நகரம் எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்டது?

a. சுமார் 3,700
b. சுமார் 2,700
c. சுமார் 4,700
d. சுமார் 5,700

Check Answer

12. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:
கூற்று (A): பொதுக் கழிவுநீர்த் திட்டம், பொதுக்குளம், பொதுமண்டபம், தெரு விளக்குகள், தெருக்களில் குப்பைத் தொட்டிகள் காணப்படுகின்றன, காரணம் (RC): நகரங்களை ஆட்சி செய்ய

உரிய நிருவாக அமைப்பு இருந்திருக்கக் கூடும்.

a. (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
b. (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல
c. (A) சரி ஆனால் (R) தவறு
d. (A) தவறு ஆனால் (R) சரி

Check Answer

13. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி:
1. நெற்பயிரை முதன்முதலில் விளைவித்தவர்கள் சிந்து சமவெளி மக்கள்.
2 விவசாயம் மக்களின் முக்கியத் தொழிலாகும் கோதுமை, பார்லி போன்றவற்றை விளைவித்தனர், மிஞ்சிய தானியங்களைக் களஞ்சியங்களில் சேமித்து வைத்தனர்.

a. 1 மட்டும் சரி
b. 2 மட்டும் சரி
c. 1 மட்டும் 2 சரி
d. இரண்டும் தவறு

Check Answer

14. இந்தியாவில் மிகத் தொன்மை வாய்ந்த நகர நாகரிகமான சிந்துசமவெளி (ஹரப்பா) நாகரிகம் எந்த காலத்தில் செழித்திருந்தது.

a. செம்புக் காலம்
b. இரும்புக் காலம்
c. பெருங்கல் காலம்
d. இவற்றுள் எதுவுமில்லை

Check Answer

15. கீழ்கண்ட வாக்கியங்களை கவனி?
1. சிந்து சமவெளி நாகரிகத்தில் உள்நாட்டு வணிகம் மட்டும் இருந்தது.
2. சிந்து சமவெளி நாகரிகத்தில் அளவு கோலும், எடைக்கற்களும் பயன்பாட்டில் இருந்தது.

a. 1 மட்டும் சரி
b. 2 மட்டும் சரி
c. 1 மற்றும் 2 சரி
d. இரண்டும் தவறு

Check Answer

Answers

1. 2 மட்டும் 3 சரி
2. 1 மற்றும் 2 இரண்டும் சரி, மேலும் 2 என்பது 1விற்கு சரியான விளக்கமல்ல.
3. 1, 2, 3 மற்றும் 4
4. 1,2 சரி 3 தவறு
5. 1922
6. மொகஞ்சதாரோ
7. பாகிஸ்தான்
8. தங்கம்,வெள்ளி
9. 1 மற்றும் 2 சரி

10. சிந்துசமவெளி நாகரிகம்

11. சுமார் 4,700

12. (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல

13. 1 மட்டும் 2 சரி

14. செம்புக் காலம்

15. 2 மட்டும் சரி